உதவி ஆணையர்
ஒரகடம் வரி விதிப்பு
29
JUL 2019
இருப்பு: ப.ப்பை.

**துணை ஆணையர் (மாவ)(முகூபொ), சரகம்-12 அவர்களின் செயல்முறைகள்**
**பிறப்பிப்பவர் - திருமதி. அ. ஜெயசாந்தி, பி.இ.,**
**இடம் - 38/9, செட்டித்தெரு, திருப்பெரும்புதூர்.**

**நக. 1062 / 2013 / அ1**

**நாள் - 21.06.2019.**

| | | |
|---|---|---|
| பொருள் | : | பொதுப்பணிகள் - வணிகவரித்துறை - துணை ஆணையர்(மாவ), சரகம்-12 - திருமதி. செ. மகேஸ்வரி, தட்டச்சர், உதவி ஆணையர்(மாவ), ஒரகடம் வரிவிதிப்பு வட்டம் - சாதிச் சான்றிதழ் உண்மைத் தன்மை அறிக்கை - வரப்பெற்றது - பணிவரன் முறை - ஆணை பிறப்பித்தல் - தொடர்பாக. |
| பார்வை | : | 1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அவர்களின் கடித எண் 7244/PSD-A4/ 2012, நாள்-07.02.2013.<br>2. இணை ஆணையர்(மாவ), சென்னை (தெற்கு) கோட்டம் அவர்களின் நக.11204/2012/அ2, நாள்-03.04.2013.<br>3. துணை ஆணையர்(மாவ), சரகம்-12 அவர்களின் செமுநக.1062/ 2013/அ1, நாள்-25.04.2013.<br>4. துணை ஆணையர்(மாவ), சரகம்-12 அவர்களின் செமுநக.1062/ 2013/அ1, நாள்-28.03.2014.<br>5. இணை ஆணையர்(மாவ), சென்னை (தெற்கு) கோட்டம் அவர்களின் நக.11204/2012/அ2, நாள்-03.04.2014.<br>6. தமிழ்நாடு மாநில அளவிலான ஆய்வுக்குழு-II , ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அவர்களின் செ.மு.நக.6588/ CV-4(1)/2014-7, நாள் - 15.04.2019.<br>7. இவ்வலுவலக நக. 1062/2013/அ1, நாள் - 22.05.2019.<br>8. இணை ஆணையர்(மாவ), சென்னை (தெற்கு) கோட்டம் அவர்களின் நக.1612/2017/அ2, நாள்-18.06.2019. |

***********

**ஆணை:**

பார்வை 1-ல் காணும் கடிதத்தின்படி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் 2007-08 முதல் 2012-13 வரையிலான ஆண்டுகளுக்கான தொகுதி-4 தேர்வில் தட்டச்சர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு பார்வை 2ல் காணும் இணை ஆணையர்(மாவ), சென்னை (தெற்கு) கோட்டம் அவர்களின் செயல்முறைகளின்படி இச்சரகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட திருமதி. செ. மகேஸ்வரி, பார்வை 3-ல் காணும் துணை ஆணையர்(மாவ), சரகம்-12 அவர்களின் செயல்முறைகளின்படி துறைப்பிரதிநிதி-5 அலுவலகத்தில் தட்டச்சராக பணியில் சேர்ந்தார். தனியாளர் தற்போது உதவி ஆணையர்(மாவ), ஒரகடம் வரிவிதிப்பு வட்டம் அலுவலகத்தில் தட்டச்சராக பணிபுரிந்து வருகிறார்.

பார்வை 4-ன் வழி தனியாளரது சாதிச் சான்றிதழ் தமிழ்நாடு மாநில அளவிலான ஆய்வுக்குழு-II, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அவர்களுக்கு மெய்த்தன்மை அறிய அனுப்பப்பட்டது.

பார்வை 6-ன் வழி காணும் செயல்முறைகளின்படி தனியாளரின் சாதிச் சான்றிதழ் மெய்த்தன்மையுடையது என்ற தமிழ்நாடு மாநில அளவிலான ஆய்வுக்குழு-II, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அவர்களின் ஆய்வு அறிக்கை இவ்வலுவலகத்தில் பெறப்பட்டுள்ளது,

தனியாளரின் பணிவரன் முறை தொடர்பாக தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் அவர்களிடமிருந்து கடிதம் பெற்ற பிறகே தனியாளருக்கு பணிவரன்முறை செய்யப்பட வேண்டும் என்று பார்வை 5-ன் வழி இணை ஆணையர்(மாவ), சென்னை (தெற்கு) கோட்டம் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து பார்வை 8-ல் பெறப்பட்ட இணை ஆணையர்(மாவ), சென்னை (தெற்கு) கோட்டம் அவர்களின் கடிதத்திற்கு இணங்க திருமதி. செ. மகேஸ்வரி, தட்டச்சர் என்பவருக்கு தற்காலிக தெரிவு உறுதி செய்யப்பட்டதின் அடிப்படையில், கீழ்க்கண்டவாறு பணி வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ.எ | பெயர் (ம) பதவி | பணிபுரியும் அலுவலகம் | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன் முறை செய்த நாள் |
|---|---|---|---|---|
| 1. | செ.மகேஸ்வரி, தட்டச்சர் | உதவி ஆணையர்(மாவ), ஒரகடம் வரிவிதிப்பு வட்டம் | 29.04.2013மு.ப | 29.04.2013 மு.ப |

மேலும் தனியாளர் பணிவரன் முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர்ந்து மூன்றாண்டுகள் பணியாற்றுதலுக்குட்பட்டு 2 ஆண்டுகள் தகுதிகாண் பருவ காலமாக நிர்ணயிக்கப்படுகிறது. தனியாளர் தகுதிகாண் பருவ காலத்திற்குள் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்வு தேர்ச்சி பெறவேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

ஒம்./- அ. ஜெயசாந்தி,
துணை ஆணையர்(மாவ) (முகூபொ),
சரகம்-12 (இ) திருப்பெரும்புதூர்.

பெறுநர்
தனியாளர்(உரிய வழி மூலமாக)

நகல்-1. இணை ஆணையர்(மாவ), சென்னை (தெற்கு) கோட்டம் அவர்களுக்கு தகவலின் பொருட்டு பணிந்தனுப்பப்படுகிறது.
2. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை.
3. உதவி ஆணையர்(மாவ), ஒரகடம் வரிவிதிப்பு வட்டம்
4. சம்பளப் பட்டியலுக்கு
5. பணி ஆணைத்தொகுப்பு
6. உதிரி - 1.

//உண்மை நகல்//

இரா.சசி [signature]
மேலாளர் / மாவஅ. 21/6/19

[signature] 21.6.19